ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2496/30 - 2026 ජූලි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.07.09

2496/30 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 98

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**
**(திருத்தியமைக்கப்பட்டது)**

12(2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 12(2) இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, பதப்படுத்தப்பட்ட திரவப் பால் (Processed Liquid Milk) தயாரிப்பாளர், உற்பத்தியாளர், இறக்குமதியாளர், பொதியிடுபவர், வழங்குநர், களஞ்சியப்படுத்துவர், விநியோகத்தர், போக்குவரத்தாளர் அல்லது வியாபாரி எவரும், இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை தர நிர்ணயம் SLS 1815 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, பதப்படுத்தப்பட்ட திரவப் பாலுக்கான (Processed Liquid Milk) அஃப்லாடாக்சின் வரம்பு 0.5 μg/kg (ppb) என்ற அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச வரம்பிற்கு இணங்கினாலன்றி அத்தகைய பொருட்களை தயாரிக்கவோ, உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, பொதியிடவோ, வழங்கவோ, களஞ்சியப்படுத்தவோ, விநியோகிக்கவோ, போக்குவரத்து செய்யவோ, விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக வெளிப்படுத்தவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

இப் பணிப்புரை, 2027 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

**எஸ்.எம். டீ. சூரியகுமார,**
தவிசாளர் (பதில் கடமை).

கொழும்பு ,
2026, யூலை 09.

EOG 07 - 0145

1A - PG 7795 - 53 (2026/07) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*